**பாததும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 21 ஆம் திகதியும் விரிவான கணக்காய்வு முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் பாததும்பர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கருத்திட்டமொன்று மேற்கொள்ளப்படாதிருந்த போதும் ரூபா 6,813,750 கடன்கொடுனராகவும் ரூபா 4,278,218 சொத்தாகவும் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 05 சொத்துக்களின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 2,300,000, ரூபா 795,120 ஆன முச்சக்கர வண்டியொன்று மற்றும் இயந்திரமொன்றும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 50,000 மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 84,109 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | கடன் கொடுத்தோர் ரூபா 21,117,122 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டு இறுதிக் கணக்கினூடாக சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத் தொகை ரூபா 133,597,934 ஆன 14 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகள் மற்றும் துணைப்பதிவேட்டில் காட்டப்படும் மீதிகளிடையில் ரூபா 24,533,546 வித்தியாசம் ஆனது. | தொடர்புடைய மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சீராக்க வேண்டும். | இவ் வித்தியாசத்தை கண்டறிந்து தீர்த்துக் கொள்கிறேன். |

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **பெற வேண்டிய கணக்குகள்** | | |
| ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 11,640,127 ஆனது | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம் மீதிகளை கண்டறிந்து தீர்த்துக் கொள்கிறேன். |
| (ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| கால பகுப்பாய்வின் படி ஓராண்டை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 30,440,501 ஆனது | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம் மீதிகளை கண்டறிந்து தீர்த்துக் கொள்கிறேன். |

### 1.3.4 கணக்காய்விற்கு சான்றுகளின்மை

| | | |
|---|---|---|
| ரூபா 100,481,496 பெறுமதியான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் அட்டவணைகள் சமர்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிளை உறுதிப்படுத்தும் சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது அட்டவணையை சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) | ரூபா 2,533,660 ஆன காலம் கடந்த 122 வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடத்திருக்கவில்லை | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். | இவ் வைப்புகள் பற்றி கண்டறிந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 9,876,032 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 11,949,326 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 7,083,000 | 7,486,367 | 8,149,308 | 4,313,761 | 7,418,000 | 6,776,768 | 6,876,509 | 3,869,944 |
| (ii) | வாடகை | 657,000 | 2,127,950 | 2,137,240 | 412,211 | 685,000 | 1,400,440 | 1,387,160 | 401,351 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,200,000 | 2,200,000 | 2,420,040 | (220,040) | 2,200,000 | 2,200,000 | 2,480,875 | (286,875) |
| (iv) | ஏனைய வருமானம் | 12,986,720 | 14,385,688 | 1,924,688 | 21,290,519 | 26,136,000 | 15,318,437 | 13,367,602 | 6,009,582 |
| | | **22,926,720** | **26,200,005** | **14,631,276** | 25,796,451 | **36,439,000** | 25,695,645 | **24,112,146** | 9,994,002 |

**2.2.2 வருமானம் சேகரித்தளின் செயலாற்றுகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் சேர்க்கப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 36,194,007 ஆன போதும், ஆண்டினுள் சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 14,631,276 ஆனமையால் வருமானம் சேகரிப்பதன் முன்னேற்றம் 40 சதவீதமானது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**2.2.3 நீதிமன்ற தண்டப ்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 2,067,723 தொகை ரூபா 19,907,067 ஆனது. | குறித்த பணத்தை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018.12.31 திகதிக்கு சரியான மீதிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொண்டு நிலுவை பணத்தை அறவிட்டேன். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **துணைச் சட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை செய்வதற்காக துணைச் சட்டம் விதிக்கபட வேண்டிய போதும் 12 விடயங்களிற்கு மாத்திரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு வருமானத்தை ஈட்டக் கூடிய துணைச் சட்டங்களை விதித்து வருமானம் ஈட்டுவதத்தை செய்ய வேண்டும். | துணைச் சட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) ஒதுக்கீடு மேற்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு வழங்கப்பட்ட 27 செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் பாதீட்டை தயாரித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் | செயல் நடவடிக்கை திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் இப்பிரச்சினை ஏற்படமாட்டாது. |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களிற்காக ஒதுக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பாவினைக்கு உரிய முறையில் கடையறைகள் தயாரிக்கப்படாமையினால் ரூபா 846,000 ஆன கடை வாடகை வருமானமொன்று மற்றும் 2014 திசெம்பர் 11 ஆம் திகதி மதிப்பீட்டை செயற்படுத்தாமையினால் ரூபா 499,500 வரமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | புாவினைக்கு உரிய முறையில் தயாரித்து வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | வியாபார கட்டிடத் தொகுதியின் அமைப்பை வேறுபடுத்தி பழுதுபார்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மடவல நகர அருகால் ஓடும் நீரோடையிற்கு தடுங்கலாகும் வகையில் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீரோடை அருகிலான அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந் நிர்மாணத்தை உடனடியாக இடை நிருத்தி சட்ட ரீதியாக்கும் வேலை திட்டமொன்று மேற்கொள்ளப்படுகிறது. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 13 ஊழியர் வெற்றிடங்கள் ஆனது. | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 சொத்துக்கள் முகாமை**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பபை உறுதிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மடவல நகரத்தின் சபைக்கு சொந்தமான 10.9 பர்சஸ் காணியால் 5.26 பர்சஸ் அளவு அனுமதியின்றி அனுபவித்துக் கொண்டிருந்ததுடன், சபை காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 3 கடையறைகள் 10 வருடங்களை விஞ்சிய காலத்திலிருந்து மூடி வைக்கப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதியின்றி கைபற்றிய காணித் துண்டின் சொந்தத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள உள்ளுராட்சி ஆணையாளரிற்கு ஆவணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. |

**3.4.2 சொத்துக்களின் பெற வேண்டிய வருமானம் பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுபைக்கு சொந்தமான ரூபா 16,695,000 பெறுமதியான பெகோ இயந்திரத்தினால் வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இயந்திர உபகரணங்களிலிருந்து உச்ச பயனை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமானம் ஈட்டுவதற்கு உபயோகிக்கிறேன். |

**3.4.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,259,350 பெறுமதியான நீர் உபகரணங்கள் நீன்ட காலமாக விநியோகிக்காமல் கலஞ்சியத்தில் நிலவியது. | தேவை பிரகாரம் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நீர் குழாய் உபகரணங்கள் தேவைக் கேட்ப தீர்மானிக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 21 வருமான விடயங்களுக்காக ரூபா 964,000 ஆன மதிப்பிடப்பட்ட வருமானத்திளிருந்து எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டில்லாததுடன், 57 செலவின விடயங்களின் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 8,994,500 ஆன ஒதுக்கீட்டின் எவ்வித செலவும் மேற்கொள்ளாமல் மொத்தமாக எஞ்சியிருந்தது. | பாதீட்டை மிகவும் சரியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரித்தல் மற்றும் முரண்களை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |